# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : S.T.C.560/2021 | Date | : 27.04.2026 |
| Deposition of Witness for | : **எ.சா.3** | Taluk | : |
| Name | : **சுரேஷ்** | Calling | : |
| Father Name | : **ராஜு** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.04.2026.

**(எதிரி மற்றும் புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ICICI வங்கியின் சங்ககிரி கிளையின் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து எனக்கு கிடைத்த சாட்சி அழைப்பாணை அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் தற்போது நான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வந்த சாட்சி அழைப்பாணையை சங்ககிரி கிளை, ICICI வங்கி சேமிப்பு கணக்கு எண்–088601000259–ன் Account Statement 2010 முதல் 2026 மார்ச் மாதம் வரையில் உள்ள விவரங்களை இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி உத்தரவிடப்பட்டிருந்தது.

2. சங்ககிரி கிளை, ICICI வங்கி சேமிப்பு கணக்கு எண்–088601000259–ன் வங்கி கணக்கு கடந்த 20.05.2013 அன்று முடிக்கப்பட்டிருந்த நிலையிலும், பத்து வருடங்களுக்கு மேல் உள்ள வங்கி

கணக்கு விவரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ள காரணத்தினால், மேற்சொன்ன வங்கி கணக்கு Account Statement 2010 முதல் 2026 மார்ச் மாதம் வரையில் உள்ள விவரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. இந்திய ரிசர்வ் வங்கியின் விதியின் படி பத்து வருடங்களுக்கு மேல் உள்ள வங்கி கணக்கு விவரங்களை நாங்கள் அழிக்க வேண்டியது எங்கள் கடமையாகும். அழிக்கப்பட்ட ஆவணங்களை எங்கள் வங்கி மீட்டெடுக்க முடியாது.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1. மேற்சொன்ன சேமிப்பு வங்கி கணக்கை எதிரி குளோஸ் செய்யும் போது, எதிரியிடம் இருந்த அனைத்து காசோலைகளையும் எங்கள் வங்கியில் சமர்ப்பித்தாரா என்று சொன்னால், எதிரி ஒப்படைக்கவில்லை. மேற்சொன்ன வங்கி கணக்கை எதிரி முடித்த பிறகு, மேற்சொன்ன வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என்ற விவரம், எதிரி பிறரிடம் கொடுத்து வைத்திருந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த பிறகு தான் மேற்சொன்ன வங்கி கணக்கு முடிக்கப்பட்டதா, செயல்பாட்டில் உள்ளதா என்ற விவரம் தெரியும் வரும் என்று சொன்னால், சரிதான். எதிரி தனது காசோலை தொலைந்து போய்விட்டது என்றோ அல்லது சேதம் ஆகிவிட்டது என்றோ அல்லது Stop Payment கோரிக்கை அளித்துள்ளாரா என்று சொன்னால், இல்லை.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

Witness

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

**Sd/-D.Sivakumar**

Judicial Magistrate No.II,
Sankari.